
உ

முகவுரை

இவ்வுபநிஷத் ... தம்ஸ்காந்தம், சிவபுராணம் முதலியபுராணங்க ... ளிற்குறிக்கப்பட்டு அஜபாகாயத்ரீயெனப்பட்ட ஆத்துமமந்திரவேத சாஸ்திரத்தின் சொரூபத்தைநிரூபிப்பதொன்றும். சுக்லயஜுர் ... இரண்டு ... த்தில் இரண்டு ஹம்ஸோபனிடதங்களிருத்தலாலுமவற்றின் வே ... சன்னியாச தர்மங்களையேநிரூபித்தலாலும், இஃது ... டதமென்றும் ... றுமை தெரியவேண்டி ஒன்றை ஹம்சோபநிடதமென்றும் வழங்குவ ... ற்றொன்றைப் பரமஹம்சோபனிடதமென் ... நாதயோகத்தை நி ... இவ்வுபனிடதம் ஷடாதாரக்ரமமும் ஆத்துமமந்திரசாதனக் ... பித்து தசவிதமஹாநாதங்களையும் அதன் சொரூபத்தையும் ... த்தையும் அதனங்கங்களை, சிவபுராணம் முதலிய புரா ... ங்கிறது ... சூதசம்ஹிதை ... விரங்கணமுண்டு. இதுஎல்லாவச் ... பொதுவாயினும் சன்னியாசிகளுக்கு மிக்க ... சிறந்ததுமாம். ஆகவேயிதனை ஹம்ஸோபனிடதமென்றது. இ ... து சுவேதாசுவதரவுபனிடதத்திற் குறியபடி ஹம்சனென்ற ஜீ ... வனது சொரூபத்தையும், பரமஹம்சனென்றபரமேசுவரசொ ... ரூபத்தையும் ஐக்கியப்படுத்தியுபதேசித்து அத்வைதானந ... சாம்பிராஜ்யத்தைக்கொடுப்பது. இதனைப்பிராணவித்தை ... யென்பர். இதுபலவுபனிடதங்களிலும் நிரூபிக்கப்பட்டதா ... வித்தையாயினும், இவ்வுபனிடதத்திலது சாங்கோபாங்க ... மாக நிரூபிக்கப்பட்டது. ஹம்சனதுவிசுவரூபதியானமும் சு ... சொரூபதியானமும் இதில் விரிவாயுண்டு. இதற்கு ஸ்ரீச ... ங்கரானந்தபகவத்பாத சுவாமிகள், பட்டநாராயணர், வித் ... யாரண்யஸ்வாமிகள் முதலிய முன்னோருரையன்றி சுதாசி ... வயோகிகளென்பவருரையுமொன்றுண்டு. சிவாத்வைதிக ... க்கு இன்றியமையாதவிவ்வுபடதத்தை யாம் 'ஹம்ஸவ ... ' என்ற பெயரையுடைய வடமொழிவியாக்கியானத்தா ... லுரைபெயர்த்தேமாயினும், தமிழிலும் அத ... ர்க்காகமொழிபெயர்த்தோம். சாம்பவசிகா ... ன்னூலைத் தன்னூல்போலேற்று எம்மையா ... அகிலாநந்தனம்பிகைபாகன் திருவடிமலர் ... தியானிப்பாம்.

கிரந்தகர்த்தா.



உ

பாராயணபாடம்

ஶ்ரீ க்ருஷ்ணயஜுர்வேதீய ஹம்ஸோபநிஷத்

ஹரி꞉ ஓம் ॥ பூர்ணமத꞉ பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே । பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவஶிஷ்யதே ॥ ஓம் ஶாந்தி꞉ ஶாந்தி꞉ ஶாந்தி꞉ ॥

கௌதம உவாச ॥ பகவந் ஸர்வதர்மஜ்ஞ ஸர்வஶாஸ்த்ரவிஶாரத ॥ ப்ரஹ்மவித்யாப்ரபோதோ வை கேநோபாயேந ஜாயதே ॥ ஸநத்குமார உவாச ॥ விசார்ய ஸர்வவேதேஷு மதம் ஜ்ஞாத்வா பிநாகிந꞉ । பார்வத்யா கதிதம் தத்த்வம் ஶ்ருணு கௌதம தந்மம ॥ அநாக்யேயமிதம் குஹ்யம் யோகிநே கோஶஸம்நிபம் ॥ ஹம்ஸஸ்யாக்ருதிவிஸ்தாரம் புக்திமுக்திபலப்ரதம் । அத ஹம்ஸபரமஹம்ஸநிர்ணயம் வ்யாக்யாஸ்யாம꞉ ॥ ப்ரஹ்மசாரிணே ஶாந்தாய தாந்தாய குருபக்தாய ஹம்ஸஹம்ஸேதி ஸதா த்யாயந் ஸர்வேஷு தேஹேஷு வ்யாப்ய வர்ததே । யதா ஹ்யக்நி꞉ காஷ்டேஷு திலேஷு தைலமிவ தம் விதித்வா ம்ருத்யுமத்யேதி । குதமவஷ்டப்யாதாராத்வாயுமுத்தாப்ய ஸ்வாதிஷ்டாநம் த்ரி꞉ ப்ரதக்ஷிணீக்ருத்ய மணிபூரகம் ச கத்வா அநாஹதமதிக்ரம்ய விஶுத்தௌ ப்ராணாந் நிருத்யாஜ்ஞாமநுத்யாயந் ப்ரஹ்மரந்த்ரம் த்யாயந் த்ரிமாத்ரோঽஹமித்யேவம் ஸர்வதா த்யாயந் பஶ்யத்யநாகாரஶ்ச பவதி । ஶிகாந்தே ஸ்தாநே ஏஷோঽஸௌ பரமஹம்ஸோ பாநுகோடிப்ரதீகாஶோ யேநேதம் ஸர்வம் வ்யாப்தம் தஸ்யாஷ்டதா வ்ருத்திர்பவதி । பூர்வதலே புண்யே மதி꞉ ஆக்நேயே நித்ராலஸ்யாதயோ பவந்தி । யாம்யே க்ரூரே மதி꞉ நைர்ருதே பாபே மநீஷா வாருண்யாம் க்ரீடா வாயவ்யே கமநாதௌ புத்தி꞉ ஸௌம்யே ரதிப்ரீதி꞉ ஈஶாநே த்ரவ்யாதாநம் மத்யே வைராக்யம் கேஸரே ஜாக்ரதவஸ்தா கர்ணிகாயாம்

பாராயணபாடம்

[illegible]

[illegible] ||

ஹம்ஸோபநிடதத்தின்

பேருரை.

அவதாரணிகை

இனி வேதநாயகி சர்வவேதாந்தங்களிலும் யோகிகளுக்குரியதாக கொண்டாடப்பெற்ற ஆன்மமந்திரரகசியத்தை எல்லாவேதாந்தங்களுக்கும் சாதாரணமான உபதேசமுறையில் நிரூபிக்கருள்வாளாய் கௌதமர் சனத்குமாரர் இவ்விருமகாமுனிகளின் சம்வாதரூபமாக வித்தையைத் தொடங்குகின்றார்.

𑌭𑌗𑌵𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌶𑌾𑌰𑌦 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑍋 𑌹𑌿 𑌕𑍇𑌨𑍋𑌪𑌾𑌯𑍇𑌨 𑌜𑌾𑌯𑌤𑍇

(இ—ள்) எல்லா தர்மங்களையும் அறிந்து எல்லாச் சாஸ்திரங்களின் பொருள்களையும்நன்றாகத் தெரிந்துகொண்ட ஓ பகவானே! எந்தவுபாயத்தால் பிரம்மவித்தையின் அறிவுண்டாம். (அதனை யுபதேசித்தருள்வாயாகவென்று கௌதமர் வினவினார்) என்பது

(வி—ரை.) எல்லாத்தருமங்களையுமறிந்து = தமதுஆச்சிரமத்துக்குரிய எல்லாத்தருமங்களையுமனுஷ்டித்து எல்லாச் சாஸ்திரங்களின் பொருள்களையும் நன்றாய்த்தெரிந்துகொண்ட என்று மேலே அறிவுகுறிக்கப்படுதலால். பகவானேயென்றுவிளித்தலால்ஞானவைராக்கியங்களில் பரிபூர்த்திஒருவாறு ஆசிரியனிடத்து அமைக்கப்பட்டதாமெனக. இதனால் ‹‹𑌆𑌚𑌿𑌨𑍋𑌤𑌿 𑌹𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍 𑌆𑌚𑌾𑌰𑍇 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑌤𑍍𑌯𑌪𑌿 । 𑌸𑍍𑌵𑌯𑌮𑌾𑌚𑌰𑌤𑍇 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑍇𑌨 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 । எவன் சாஸ்திரங்களைக்கற்பான், எவனவற்றையுபதேசிப்பான், எவனவற்றையனுஷ்டிப்பான் அவனேயாசிரியனாம்'' என்று ஆன்றோர்கூறிய ஆசிரியவிலக்கணம் தழுவப்பட்டதெனக. எந்த உபாயத்தால் = எந்த சுலபமான அந்தரங்கசா

தனத்தால்; பிரம்மவித்தையின் அறிவு = ஆன்மாவின் சைதன்னியமென்றாற்போல் ஈண்டமைந்த ஆறும் வேற்றுமை ஒற்றுமையையே குறித்தலால் பிரம்மவித்தையாகிய அறிவென்பதுதன் பொருள். அறிவென்பது பொதுச் சொல்லாதலால், அதன் விசேடமாயபிரம்மவித்தையானது இங்குவிசேடணமாயமைக்கப்பட்டது- சாமான்னியத்தில் விசேடத்தை ஒற்றுமைப்பொருள்கொண்டாரும் வேற்றுமையால் வழங்குவது ராகுவின் சிரம், பதுமையின் சரீரமென்பதாதி பல்விடங்களிலான்றோர் வழக்கிலமைந்ததேயாமென்க- பிரம்மவித்தையென்பது பிரம்மாகாரமாய்ப்பரிணமித்த அந்தக்கரணவிருத்தியாம். உண்டாகும் = அபிவியத்திடையும், வெளிப்படும். அத்தனையுபதேசித்தருளீவாய் என்பது பிரகரணத்தாலவானிலைபற்றிவருவித்துச்சொற்றாரோர். பின்னர் சனத்குமாரமுனிவர்உபதேசிக்குங்கால் சீடனைக்கௌதமனென விளித்தலால், இங்குவினவியசீடர்கௌதமனெனப்பொருள் படுத்தேமென்க. இவ்வனமின்றி உபனிடதத்துவக்கத்திற்றானே கௌதம உவாவ = கௌதமர் வினவினார் என்று சேர்த்துப்படித்ததுமுண்டு. சங்கராசார்த்திருமூர்த்திகள் இயற்றிய உரையில் முதல் மூன்றுமந்திரங்களும் இறுதியில் மூன்று மந்திரங்களும் ஒழித்து இடையே உள்ளமந்திரங்களை உரையிடப்பட்டிருக்கின்றன. இம்மந்திரங்கள் யெல்லாவற்றையும் நாராயணபட்டர் உரையிட்டாராயினும் அவ்வுரைவடநாட்டுப்பாடத்தையனுசரித்தமையால் தென்னாட்டுப் பாடத்தை யனுசரித்துச் செய்யப்பட்டஇவ்வுரையில் சிறிதுவேற்றுமைகள் காணப்படும். அவைகளை யாங்காங்கு விரிப்பாம்.

அவதாரிகை

சனத்குமாரர் உபதேசிக்குமுறையைக் கூறுகின்றார்,

ஸநத்குமார உவாவ |

விசாரயஸ்வ யத்நேந ஸ்ரீகுரோராஜ்ஞயா த்வயா |
ப்ராப்யதே பரமம் தத்வம் ஸம்ப்ரதாயேந கௌதம || என்று

(இ—ள்) சனத்குமாரர் சொன்னார். சாஸ்திரங்களினும் (உண்மையை விசாரித்து பரமசிவனது சம்மதத்தைத்

தமூரி! பார்வதியால் சொலப்பட்ட அந்தமதமாகிய தத்துவத் என்பது
தை ஓ கௌதம! கேட்பாயாக)

(வி—ரை) சர்வதர்மங்களிலும் என்றது எல்லாவைதிகதர்மங்களிலும் என்ற கருத்தால். உண்மையைவிசாரித்து என்றால் மேற்கண்டதர்மங்களையனுஷ்டித்தலாலுண்டாகும் பயன்களின் சொரூபத்தை யறிந்து என்றது பொருளாம். பரமேசுவரனதுமதம் = பரமேசுவரனது திருமுகமண்டலத்துதித்தவேதாதிகள்- அறிந்து = என்றமைபால பரமேசுவரனது ஆஞ்ஞாசொரூபங்களானவேதாதிகளை முறைவழாது மூகறிஞர்பாற் கேட்டவற்கே வேதாந்தாசாரியத்துவம் சிறக்குமென்பது வெளிப்பட்டது எக்காலத்தும் எக்கன்மத்துக்கும் எவ்வருணத்தவருக்கு மதிகாரம் அவ்வக்கன்மவியல்பையறிந்தவன் ஓராம்பயிற்சியுடைமையதென்பது இதன்கருத்தாம். பார்வதியால் சொல்லப்பட்டது சிவனதுமதமென்று குறித்தமையால் இப்பிரம்மவித்தையின் வரவுபரமேசுவரன்பார்வதிமுதலிய பரமபூர்வசத்குருநாத பரம்பரையிலுள்ளதெனக் காட்டப்பட்டது. பரமேச்சுரன் மங்கையற்கருமலைகட்குபதேசிக்க அவ்வம்மையின் திருமுலைப்பாலுண்டுகளித்த குமரன் அவ்வம்மையிடத்தே அன்னவுபதேசத்தை முறையே பெறுவதனை அம்முருகக்கடவுளாடியினைபோற்றி சனற்குமாரமுனிவர்பாற்கேட்டுச் சிந்தித்துத்தெளிந்தாரெனக் கந்தபுராணம் சனற்குமாரசங்கிதை முதலியவைகளைக் கண்டுத்தமாண்பெய்திய சிவதத்துவசுதாநிதியில் விரிந்து கிடைக்குமோர் உண்மையே இதனுண்மைக்கருத்தாமென்க. இதன்விரிவை அச்சிவதத்துவ சுதாநிதிக்குயாமியற்றிய சிந்தாமணியுரையிற் காணலாம். அல்லது "ஸமவாந் ஸநத்குமாரஸ்ஸ்கந்த இத்யாசக்ஷதே = பகவான்சனத்குமாரர் அவரையேஸ்கந்தரென்பார்" என்று சாந்தோக்கியவுபநிடதம் கூறியவாறுகண்டு சனத்குமாரர் என்ற சொல்லுக்குமுருகக்கடவுளே பொருளாயினுமாகுக. தத்துவத்தையுபதேசிப்பேன்கேள் என்றதால் புலன்முதலிய வியப்பிரமாணங்களால் வருவனையறியவியலாதுபற்றி அது ஆசிரியனதுசதுபதேசத்தாற்றான் கிடைக்கப்பாலதென்பதுங் குறிக்கப்பட்டதாயிற்று. முன்னமே 'உண்மையுபதேசித்தருள்வாய்' என ஆசிரியனை நோக்கி வினவிய சீடனுக்குமீண்டும் கேள் என

ஆணையிடுதல் அகத்தும் புறத்தும் சிதறுண்டுகிடக்கும் பல்கோடிவிஷயங்களில்எதிலும் மனதைப்பற்றவொட்டாது ஒருவகைப்படுத்தித்தமதுபதேசத்தையேற்குமாறு இட்டப்படுத்தவேண்டியவாசிரியன் றொழிலைக் குறித்ததாம்.

அவதரணிகை

இங்ஙனமுபதேசமுறை பற்றியோர் பீடிகையிட்டு உபதேசிக்கப்புகும் விஷயத்தில் சிட்டனுக்குப் பேரவா பிறக்கவேண்டி அவ்விஷயத்தை முன் அர்த்தவாதந்யாயத்தாற் புகழ்கின்றார்.

ரஹஸ்யமிதம் குஹ்யம் யோகிநாம் கோஶஸந்நிபம் |
ஸம்ஸாராக்ருதிவிஸ்தாரம் புக்திமுக்திபலப்ரதம் ||

(இ—ள்) இது யோகிகளுக்கு கோசம் போலுள்ளதாகையால் மிகவும் ரகசியமாயுள்ளது- சொல்லக்கூடாதது ஸம்சாரத்தின் ஆகிருதியும் விஸ்தாரமும் புக்திமுக்திபலனையும் கொடுப்பது. (என்பது)

(வி—ரை) யோகி = ஜீவாத்மபரமாத்மாக்களின் நெருங்கிய சேர்க்கையே யோகமாதலால் அதையுடையவன். 'ஸம்யோகோ யோக இத்யுக்தோ ஜீவாத்மபரமாத்மநோ: | = ஜீவாத்மபரமாத்மாக்களின் யோகமேயோகமெனப்படும்' என்றுயாஞ்ஞவல்கியர் அதனிலக்கணம் கூறினமையாலெனக. ஆத்மகைவல்லிய ஞானத்தை விரும்புவான் என்பதுகருத்து. கோசம் = தனது ஆபத்தன்களின்வைப்பு. எதும்பாலறதென்றால் அதனைக்காற்க முயல்வதுபோல் இதனையும் கார்க்கவேண்டியது என்பதுகருத்து. ரகசியம் = அகத்தில் நிலைபெற்றதாதலால் இதனைப் புறத்தேயறிவதுகூடாது. சொல்லக்கூடாதது = சிஷ்யன் புத்திரன் முதலிய அதிகாரிகளுக்கன்றி மற்றவர்களுக்கிதனையுபதேசிக்கக்கூடாதென்பதுகருத்து. அல்லது, சொல்லுதற்கரிய பெரியவிஷயங்கள் நிறைந்தமையால் இது சொல்லமுடியாதென்றும் பொருள் கொள்ளலாம். அல்லது ரகசியமென்றும் சொல்லக்கூடாதென்றும் சொ

ன்மையால் அனுபவத்தாலிதன் சொரூபத்தையறிந்த ஆசிரியராருள்வலியால் இதுகிடைக்கற்பாலதேயன்றி எளிதில் அறியப்பாற்றன்றெனக்கொண்டும் பொருத்தலாம். இது வேதசம்மதமெனமுன் குறித்தமையால் வைதிகமென்றேற்படுதலால் அதனையும் சேர்க்க சுருதி யுக்தி சுவானுபவங்களே இதற்குப் பிரமாணமாம் என்பதுமிடைத்தது. யோகிக்கு என்றது யோகியாகியவனுக்கு என்றபொருளினுமமையும். ஆதலால் இவ்வுபதேசத்துக்கதிகாரம் முக்கியமாய் யோகமென்பது குறிக்கப்பட்டது. ஹம்ஸத்தினது = அம்ஸமந்திரத்தினது, அல்லது ஜீவனது, அல்லது பிராணத்தினது என்று முப்பொருள்களுங் கொடுக்கத்தக்க ஹம்ஸமென்ற சொல்லால் பிரமேயத்தைக் குறித்தமையால் ஹம்ஸமந்திரத்தின் பொருளும் பிராணனுக்கு அதிட்டாதாவுமான சைதன்யமேயிதுன்பொருளாயிற்று. ஆகிருதி = சுவரூபம்; விஸ்தாரம் = இலக்கணம். புக்தி = போகம்; அதன்முக்தி = ஒழிவு, அஃதேபயன். எ-து.

அவதாரணிகை

இனி அதன் சொரூபத்தையும் அதிகாரியையும் குறிக்கின்றார்

ஸயஹம்ஸஹம்ஸேதி ஸதா ஸர்வேஷு தேஹேஷு வ்யாப்ய வர்த்ததே।
யதா ஹ்யக்நி: காஷ்டேஷு திலேஷு தைலமிவ தம்
விதித்வா ந ம்ருத்யுமேதி ஸ ஹம்ஸோ வர்த்ததே
ஹம்ஸோ ப்ரஹ்ம விதாம் வரிஷ்ட:॥ என்று

(இ-ள்) இனி ஹம்ஸபரமஹம்ஸநிர்ணயத்தை நிரூபிப்பாம். பிரம்மசாரியும்சாந்தனும் குருபக்தனுமானவனுக்கே ஹம்ஸன் ஹம்ஸன் என்று எப்பொழுதும் தியானித்துக்கொண்டு எல்லாச் சரீரத்திலும் வியாபித்திருக்கின்றது. எ—து

(வி—ரை) இனியென்றது பிரதிஞ்ஞையின் துவக்கம். உபதேசத்தின்மங்களாசரணமுமாம். ஹம்ஸ பரமஹம்ஸநிர்ணயத்தை = ஹம்ஸரென்ற சன்னியாசிகளுக்குபரமமாய் அவசியமறியத்தக்கதாய் உள்ள ஹம்ஸத்தின் = ஹம்ஸமந்திரத்தின் நிர்ணயத்தை = உபாஸ்தியின் கிரமத்தையும் சொரூபத்தையும், அதுபோரும்

= நன்கெடுத்துரைப்பாம், உபதேசிப்பாம்: பிரம்மசாரீ = பிரம்மத்தையறியவிரும்புவோன், விஷயசுகத்தைவெறுத்தவன்; சாந்தன் = புலனடக்கமுள்ளவன்; குருபக்தன் = "யஸ்ய தேவே பரா பக்திர் யதா தேவே ததா குரௌ" = "எவனுக்குதேவனிடத்தில் பூர்ணமானபக்தியுண்டு, தேவனிடத்திலுள்ளதுபோல்குருவினிடத்திலுமுண்டு;" என்று சுவேதாசுவதரம் குறித்தவிலக்கணமுள்ளவன்; ஹம்ஸன் = சீவன், பிரத்தியகாத்துமா; அம்ஸனென்ற = ஹம் - ஸ: என்று; 'ஹம்' என்பது உச்சுவாசமும் ஸ:என்பது நிச்வாசமுமாதலால் முற்புகுதிபந்தத்தையும் சப்தத்துக்காதாரமான பூதாகாசத்தையும் பொருளாய்க்கொண்டு 'ஹம்' என்ற சொல்லும் ஏகதேசமாய் அவித்யோபாதியுள்ள சைதன்யத்தைக்குறிக்கும்; ஸ:- என்ற பிற்பகுதிமோட்சரூபமாய் சரஸ்வதி பீஜமாய் நின்று சுத்தப்பிரம்மத்தையறிவிக்கும் கருவியானதாதத்தைக்குறிப்பதாய் வித்யோபாதிசைதன்யத்தைச் சொல்லுவதாம் இதனை முறைபுரட்டியுச்சரித்தால் ஸோஹமென்றாகுமாதலால் பிரத்தியக் பிரம்மைக்கியம் இதன்பொருளாம்; இம்மந்திரத்தை எந்தப்பிராணியாகிய ஜீவனும் இடையறாது ஜபிக்கிறதெனினும், அது தியானத்துடன் கூடாமையால் பயனற்றதெனக்குறிக்கின்றார் தியானித்துக்கொண்டு என்றதால். மேற்கண்ட ஜீவப்பிரம்மைக்கியதியானம் இடையறாதுள்ளவர்க்கு உண்டாகும் பயனைக்குறிக்கின்றார் எல்லாச்சரீரத்திலுமென்பதால். அஜபாகாயத்திரிவித்தையின் ரகசியமறிந்த புருடன் சர்வசரீரங்களையும் வியாபித்து ஏகாத்துமானந்தகைவல்யத்தைப் பெறுவான். எ—து

அவதாரிகை

மேற்கண்டபடி பரிபூர்ணமாக ஹம்சத்தைதியானிக்கும் முறையையும் அதன்பயனையும் குறிக்கின்றார்.

யதா ஹ்யக்நிஃ காஷ்டேஷு திலேஷு தைலமிவ
தம் விதித்வா ம்ருத்யுமத்யேதி ॥ என்று.

(இ—ள்) எங்ஙனம் கட்டைகளில் தீயும் எள்ளுகளில் எண்ணெயும் மறைந்து நிற்குமோ அங்ஙனமவனையறிந்தவர் மிருத்யுவைப்புறமுதுகிட்டார். எ—து.

(வி—ரை) இவ்வகை திருஷ்டாந்தம் பிரம்மோபநிடதத்தி ம் சுவேதாச்வதரோபநிடதத்து முளதேயாதலால் அத்னுரையி யங்கே கண்டுதெளிக; மிருத்யு=சம்சாரம்; அடையமாட்டான் என்பதற்கு மோட்சத்தைப்பெறுவான் என்பது கருத்து. ஏ—து

அவதாரிகை

இனிஹம்ஸமென்ற பிராணத்தைத்தன்வசப்படுத்தி முறை பிறழாதடக்கக்கருதுவோர் அறியவேண்டிய முறையையும் அவ் விதமனுஷ்டிப்பதாலுண்டாகும் பயனையும் நிரூபிக்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(இ—ள்) குதஸ்தானத்தைத்தகைந்து ஆதாரத்திலிருந்து வாயுவைக்கிளப்பி சுவாதிட்டானத்தை மூன்று முறைபிரதட்சிணம் செய்து மணிபூரத்தையடைந்து அனாகதத்தைக்கடந்து விசுத்தத்தில் பிராணனை நிறுத்தி ஆஞ்ஞாஸ்தானத்தையனுசரித்து பிரம்மரந்திரத்தைதியானித்து இயான் மூன்று மாத்திரைகளுள்ளவனை எப்பொழுதும் தியானித்து (உண்மையை)க்காண்பான். உருவாற்றவனுமாவான் ஏ—து

(வி—ரை) குதஸ்தானத்தைத் தகைந்து என்றதால் அபானத்தைச் சுருக்கி ஊர்த்துவமுகப்படுத்தவேண்டுமென்பது புலப்பட்டது. அதுயோகசாஸ்திரங்களிலும், அதன் விதியைக் குறிக்கும் வேறுபநிடதங்களிலும், நிரூபிக்கப்பட்ட ஆசன முறைகொண்டு ஆன்மாவின் அபிமுகப்படுத்தும் அபானத்தை நி

க்ரமிக்கவேண்டுமென்பது முடிந்தகருத்து; ஆதாரத்தினின்று = மூலாதாரமென்ற ஸ்தானத்தினின்று: வாயுவைக்கிளப்பி = அபானாம்சத்தைவிலக்கி சுத்தப்பிராணாம்சத்தை மேனோக்கச்செய்து; மும்முறைப்பிரதட்சிணம் செய்து என்றது ஸ்வாதிட்டானமென்ற சக்கரம் சுஷும்னை மூலத்துவாரமுள்ளதாய் குண்டலினீ சக்தியின் குடியிருப்பிடமாதலால் அவ்விடத்தில் காயாக்கினியைமூழ்கவைத்து குண்டலியைவிலக்கி பிரம்மநாடியிலுட் புகுவதற்காக அவ்வளவு காலம் பிராணன் செய்யவேண்டிய தொழிலைக் குறித்தது. விசுத்தியில் பிராணனைத்தகைந்து என்றது விசுத்திமுதல் உள்ளமேலாதாரங்களின்வழி அதிசூட்சுமமாதலாலெனக- 'பிரம்மரந்திரத்தைத் தியானித்து' பிரம்மரந்திரத்தில் பிராணன்பிரவேசிப்பது எவ்வகை வெளிக்குறியாலுமகப்படாமையால் அதுதன்மனதுக்கே புலப்படுமாறு, இடையறாது சிந்தித்தலிதன் கருத்தாம். மூன்றுமாத்திரைகளுள்ளவன் என்றது பிரணவமாம். அல்லது ஜடன், ஜீவன, ஈசுவரன் முதலிய மூவகைப்பட்டப்பிரபஞ்சமெல்லாம் அதன்பொருளாகும. பிரணவமும் பிரணவப்பொருளாப சம்ஸ்தமும் தானேயன்றி நினைப்பதென்றாய் தனது சொரூபத்திற் கற்பிதமென்றேநினைத்தொழிப்பது. எப்பொழுதுமென்றதனால் இவ்வனாதியான அவ்விச்சின்னத்தை தாராநியாயத்தால்பிறசாதியிடர்படாது தன்சாதித்தொடர்பாகவேநிற்கவேண்டும் என்றதாயிற்று. உண்மையைக்காண்பான் = இப்பொழுது கண்டது உண்மையென்றதால் இதற்கு முன்கண்டதெல்லாமதற்கெதிர்மறையென்றதாயிற்று, மூலத்தில் காண்பானென்றேயிருத்தலால் பொருளல்லாததைப் பொருளெனமயங்கி கண்டகாட்சி மருட்காட்சியேயன்றி தெருட்காட்சியாகாதெனப் பொருள் விளங்குகின்றமையால் அப்பொருள்விளங்கவே உண்மையென்பதையாம் வருவித்தோமென்க. உருவமற்றவனுமென்றமையால் நாமமற்றவனும் குறிக்கப்படுவான். ஆகவே நாமரூபஹீன சுத்தசொரூபமே அஜபாமகாநிஷ்டனுக்கு பரமப்பிரயோஜனமாமென்பது சொல்லப்பட்டது. எ—து.

அவதாரணிகை

சித்தியின் குறிகளைக் காட்டுகின்றார்,

ஶிஶ்நஸ்ய பார்ஶ்வயோஸ்ஸமத:
ஸ ஏஷ வை பரமஹம்ஸ: |
ஸூர்யகோடி ப்ரதீகாஶ:
யேநேதம் ஸர்வம் வ்யாப்தம் || என்றது.

(இ—ள்) ஆண் குறியின் இரு பக்கங்களும் (சமமாக) ஆகும். இவனே அந்தப் பரமஹம்ஸனும், கோடிசூரியர்களுக்குச் சமானனாவான். இவனால் உலகெலாம் விளக்கப்படும்.

(வி—ரை) ஈண்டு ஆண்குறியென்றது, அக்குறியின் ஈரங்குலம் கீழும் ஆசனத்தின் ஈரங்குலம் மேலுமுள்ள ஸ்தானமாகிய தேகமத்தியத்தைக் குறித்தது. "ஆஸநாத் த்வ்யங்குலாதூர்த்வம் மேட்ராத்து த்வ்யங்குலாதத:| தேஹமத்யம் ததாக்யாதம் தத்ர கந்தஸமுத்பவ:|| = ஆசனத்துக்கீரங்குலம் மேலும் ஆண்குறிக் கீரங்குலம் கீழும் உள்ள இடமே தேஹமத்தியமாம். அங்கே கந்தமுண்டு" என்று யாஞ்ஞவல்கியரருளிச் செய்தபடி யோகாப்பியாசிகளுக்கு அவசியமறியவேண்டியதாயுள்ள இடை முதலிய பதினான்கு (நாடிகளின் உத்பத்திஸ்தானமதுவேயாம். அவ்விடத்திருபார்சுவங்களும் சமமாமென்றால் இடைபிங்கலை இரண்டிலும் ஏற்றம் தாழ்வுடன் வெவ்வேறுகாலங்களில் ரேசகபூரகங்களால் சஞ்சரிக்கும் வாயு கேவலம் பகத்தால் சுழிமுனையில் ஒதுங்காதுட்புகுமென்பது கருத்து. அவ்விதம் சுழிமுனையினிடத்தே ஹம்சத்தைப்புகுத்திய உத்தமனே பரமஹம்சன். ஹம்சர்களைக்காட்டிலும் சிறந்தவன். ஹம்சன் என்ற சொல்லுக்கு பிராணன், ஜீவன் சதாசிவன், சூரியன், ஓர்வகை சன்னியாசி இவ்வளவும் பொருளாதலால் பரமஹம்சனென்ற சொல்லுக்கு உத்தமப்பிராணனையுடையவன் பரமசிவபக்த சிகாமணி சுத்தசொயம்பிரகாசமூர்த்தி (சூரியனைப்போல்) யோகிகளுக்குட் சிறந்தவன், பரிசுத்தஜீவன், என்பனாதி வேறுபலபொருள்களும் உசிதம் போற்கொள்ளலாம். முன்னர் சொபாவத்தால் இடைபிங்கலைகளில் பிராணவாயு சஞ்சரிக்குங்கால் எங்கோ அதிதூரத்திலிருந்தாற்போல் காணப்பட்டபர

மாத்ரமசொரூபமரீஷது 'அஜபா காயத்ரீ' மூலமந்திரோபா சனுபலத்தால் கேவலகும்பகத்தில் சுழிமுனையில் பிரவேசித்தவனு க்கு அதிசமீபமாயும் தானேயாகவும் தோன்றுமாதலால் அவ்வித சித்திபெற்றவன் பரமாத்தும சொரூபனே யென்பு துதித்தார் இப்பொருளையே சூத்சங்கிதையும் "ஹம்ஸவித்யா ... ..." இத்யாதி ... "இந்தஹம்ச வி த்தையையாதரித்தவர்க்கு சித்தி அதிசீக்கிரத்திற்கைகூடும். ரேசக த்தையும் பூரகத்தையும் விட்டு கேவலகும்பகத்தால் நாபிகந்தத்தி ல் பிராணபானங்களை கிரமமாகச்செய்து முறையேசமாதியைப் பெற்றயோகி" என்று தொடங்கி யதிசீக்கிரத்தில் இடைவிடாது செய்த அப்பியாச பலத்தால் ஈசுவரத்தன்மையைப்பெறுவான்" என்பதனை நிரூபித்திருக்கின்றது. மீண்டும் "... ... ..." = முற்குறித்த ஆன்மமந்திரத்தால் எவ ன் ஜீவாத்ம பரமாத்மாக்களின் உண்மையான ஒற்றுமையை அறி வான் "... ..." = அவனே பிரம்மநிட்டர்களு க்குள் முக்கியனுவான்" என்று உபசங்காரம் காணப்படுகின்றது. "... ... ..." = எல்லாவற்றை யுமடைவாய் எல்லாமுமாவாய்" என்று ஸ்ரீ கண்ணபிரான் கீதையில் உபதேசித்தருளியவாறு அவனே சர்வசொரூபனுய் நிற்பான் என் பதை இதனால் உலகெல்லாம் வியாபிக்கப்பட்டதனால் என்றதனால் குறிக்கின்றார் என்பது

அவதாரணிகை

மணிபூரகசக்கிரத்தில் ஹம்ஸஸஞ்சாரத்தின் பயன்களை த ளங்கள் தோறும் தனியே குறிக்கின்றார்.

... ...

... ... |

ஆக்நேயே நித்ராலஸ்யாதயோ பவந்தி
யாம்யே க்ரௌர்யே மதிர்பவதி ।
நைர்ருதே பாபே மநீஷா
வாருண்யாம் க்ரீடா
வாயவ்யாம் கமநாதௌ புத்தி:
ஸௌம்யே ரதி:
ஈஶாந்யே த்ரவ்யாதாநம்
மத்யே வைராக்யம்
கேஸரே ஜாக்ரதவஸ்தா
கர்ணிகாயாம் ஸ்வப்ந:
லிங்கே ஸுஷுப்தி:
பத்மத்யாகே துரீயமிதி ॥

(இ—ள்) அவனுக்கு எட்டுவகை அறிவுண்டாகும். கிழக்குதளத்தில் புண்ணியப்பிரவிர்த்தி ஆக்னேயத்தில் நித்திரை ஆலஸ்யம் முதலியதுண்டாகும். தென்புறத்தில் கடூர புத்தி உண்டாகும், நிருருதிதிக்கில் பாவத்தில் புத்தி, மேற்குதளத்தில் விளையாட்டு, வாயுதிக்கில் நடைமுதலியவற்றின் புத்தி, வடபுறத்தில் பிரீதி, ஈசானத்தில் ஒருபொருளை வாங்குதல், மத்தியத்தில் வைராக்யம். கேசரத்தில் ஜாக்கிரதவஸ்தை. மொட்டில் சொப்பனவஸ்தை, லிங்கத்தில் சுழுத்தி, அத்தாமரைவிட்டால் துரீயமுண்டாகும் (என்பது)

(வி—ரை) பிராணனுடன் கலந்து ஆன்மாமணிபூரகத்திலுள்ள அஷ்டதளபத்மத்தில் சஞ்சரிக்கும் பொழுது முறையேமேற்கண்ட பிரவிர்த்திகள் உண்டாம். புண்யம் = கொலைமறுத்தல் முதலியன. கிருச்சிரம் = சாந்திராயணம் முதலிய விரதங்கள். முதலியன வென்பதால் அச்சம் அருவருப்பு முதலியவற்றைக்கொள்ளவேண்டும். பாபம் = வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் விலக்கப்பட்டதை யனுஷ்டித்தலாலுண்டாகும் அதிர்ஷ்டம். க்ஷத்திரியர்

முதலியோர்க்கு படையெடுத்தல் வேட்டையாடுதல் முதலியனதர்மங்களாகவிதிக்கப்பட்டமையாலும் தெண்டாதிகாரம் தர்மமேயாதலாலும், கோரமென்பது பாபத்திலும் வேறாக எடுத்துக்காட்டப்பட்டது. விளையாட்டு = இது குழந்தைகளின் தொழிலைப்போல் சிறித்தல் சொறிதல் முதலியபயனற்றதொழில்களைக் குறிக்கும். நடைமுதலியவற்றில் = விடுதல் முதலியவற்றில். இருப்தி = அன்பும் இதனுள்ளடங்கியதே. பொருளையாவகுதல் = பொருளாசை. ஆகவே பூர்வதளத்திலும் வடக்குதளத்திலும் பிராணனைச்செலுத்தலாமேயன்றி மற்றவிடத்திற் செலுத்தல் விபரீதப்பயனையளிக்குமென்ற தேற்பட்டது. அன்பும், அம்புலி சூடியெம்பிரான் திருவடிகளிலமையா துழி அவ்வடக்குதளத்தில் சஞ்சரிப்பதும் கூடாது. எட்டுதளங்களில் ஜீவசஞ்சாரத்தின் பயன் சொல்லப்பட்டபிரகரணமாதலால் மற்றவிடத்து முள்ளபயனையும் முறைப்படி குறிக்கின்றார், நடுவிலென்பதாதியால். வைராக்கியம் = துறவு. இஃதே உத்தமாச்சிரமபரமாதிகாரமாம். லிங்கம் என்பது தாமரைமலருள் மலிந்து, கிடக்கும் தாதுக்களென்ற அதன் குறியாம். தாமரைவிடுதலென்பது அம்மணிபூரச்சக்கிரத்தைவிட்டு சுழிமுனைவழிப்பற்றி மேனோக்கிச்செல்லுதல். துரீயமென்பது மூவவத்தைகளும் கடந்ததோரவத்தை.

அவதாரணிகை

இங்ஙனம் நான்கவஸ்தைகளிலும் ஸகளமான ஆன்மசொரூபத்தை நிரூபித்து அதனை நிஷ்களப்படுத்தும் வழியைக் காட்டுகின்றார்.

> யதா ஹம்ஸோ நாதே விலீநோ பவதி
> ததா துரீயாதீதோ பவதி

(இ—ள்) இனியெப்பொழுது நாதத்தில் ஹம்சன் லயிப்பான் அதுவே துரீயாதீதமாகும். ஏ—று

(வி—ரை) இங்கு நாதமென்பது அநாஹதத்தில் தோன்றும் பராசக்திரூபநாதமாம். ஸ்ரீ நந்திகேச்வரோ நாதோ நாதி

ஸ நாதாந்த நாவாஸிநாம் ஸ்வாத்மவடீ ஸ | = அனாஹ தமென்ற விடத்தில் சுத்தானந்த சொரூபமாய் நாதரூபமாய் உனது ரூபம் திரிந்திருக்கின்றதல்லவா ஓ ஈச்வரீ! என்று காளிதாஸன் பஞ்சஸ்தவத்தில் அருளிச்செய்தானென்க.

அவதாரணிகை

இனி ஆத்மா லயிக்கக்கூடிய காரணநாதசொரூபத்தை நிரூபிக்கின்றார்.

ஸோ(அ)யம் நாதம் ஆதாராத் ப்ரஹ்மரந்த்ரபர்யந்தம்
ஶுத்தஸ்படிகஸங்காஶம்
ஸ வை ப்ரஹ்ம பரமாத்மேத்யுச்யதே ||

(இ—ள்) இனி நாதம் ஆதாரமுதல் பிரம்மரந்திரபரியந்தமுள்ளது. சுத்தஸ்படிகம் போன்ற பரமாத்தும சொரூபமான பிரம்மமே அதுவாம். (வ—து)

(வி—ரை) ஆதாரம் = மூலாதாரம். நாதம் = ஆன்மாவின் உபாதியாயுள்ளது. உபாதியில்லையவிடத்து ஜீவன் சுத்தசச்சிதானந்தமாயினும் சார்ந்ததன் வண்ணமாய் நிற்றல் அவனியல்பாகவே அவித்தையின் கண்கலந்து ஜீவனெனவிவகரிக்கப்பட்டும் வித்தியாசக்திபலத்தால் பரமாத்துமாவென வழங்கப்படுவதும் அவனே யன்றிவேறுபொருளில்லை யெனக்குறித்தற்காகவே சுத்தஸ்படிகம் போன்ற என்பதாதி சொற்றொடர் அமைக்கப்பட்டதாம். இதனால் ஜடஜீவேச்சுராதிபேதங்கள் நிஷ்களான்ம சொரூபத்தின்கண்ணே கற்பிதமென்பதும் ஜீவன் பரமாத்துமா என்பதாதிகள் கேவலம் சொன்மாத்திரையிலமைந்ததேயன்றி தனிமுதற்பொருட்களல்லவென்றும், இதனால் குறிக்கப்பட்டது. காளிதாசாதிகள் மின்னற்கொடிபோன்ற சொரூபமாய் வர்ணித்ததும், ஸ்ரீமத் ஜகத்குருசுவாமிகள் தேவீபுஜங்கத்தின்கண்ணே ஷடாதாரங்களுக்குட்பட்ட தேஜவொன்றென நிரூபித்ததும் ஸ்ரீசூதசங்கிதை அமிர்ததாரையென நிரூபித்ததும் இந்த சுத்தஸ்படிகம் போன்ற நாதத்தையேயாம்.

அவதாரணிகை.

இனி ஹம்ஸமந்திரத்தின் ரிஷி சந்தம் முதலியவற்றைக்கூறுகின்றார்.

அஸ்ய ஹம்ஸ ருஷி: அவ்யக்தகாயத்ரீ ச்ச₂ந்த₃:
பரமஹம்ஸோ தே₃வதா| ஹம் பீ₃ஜம்|ஸ: ஶக்தி:
ஸோஹம் கீலகம் | ஷட் ஸங்க்₂யா | அஹோராத்ராயோரேகவிம்ஶதிஸஹஸ்ராணி | ஷட் ஶதா
ந்யதி₄காநி ப₄வந்தி | ஸூர்யாய ஸோமாய நிரஞ்
ஜநாய நிராபா₄ஸாய தநு ஸூக்ஷ்ம ப்ரசோ
த₃யாத் இதி அக்₃நீஷோமாப்₄யாம் வௌஷட் |
ஹ்ருத₃யாத்₃யங்க₃ந்யாஸ கரந்யாஸௌ ப₄வத:॥

(இ—ள்.) இனி ஹம்சன் ரிஷி, அவ்யக்தகாயத்ரீ சந்தம், பரமஹம்சன்தேவதை ஹம் என்பது பீஜம் ஸ: என்பது சக்தி ஸோஹம் என்பது கீலகம் அதன் எண்ணிக்கையாறு; பகலும்இரவும் கூடிஇருபத்தோராயிரத்து அறுநூறு ஆகும், சூரியனுக்குச் சோமனுக்கு, நிரஞ்சனனுக்கு நிராபாஸனுக்கு, ஸ்தூலமும் சூட்சுமமும் எவ்விதம் அக்கினிக்கும்சோமனுக்கும் வௌஷட் இருதயாதி அங்கநியாசமும் கரநியாசமுமுண்டு. (எ—து

(வி—ன்ர) ஹம்சன் ஜீவனே இதற்கு ரிஷியாம். அவனே இம்மந்திரத்தைக்கண்டவனும் அதனையனுட்டித்து சித்திபெற்றவனும் சித்திபெறுபவனுமாம். அவ்யக்தகாயத்ரீயென்றது யாப்பைக்குறித்து ஒரடிக்கு ஆறெழுத்துள்ள செய்யுளுக்கு காயத்ரீயென்பது சந்தம். இம்மந்திரத்தில் ஆறெழுத்துக்கள் சூக்குமத்தில்ன்றி ஸ்தூலத்திலமையாமையால் இங்கு அவ்யக்தகாயத்ரீயென்று குறிக்கப்பட்டது. அவ்யக்தம் = சூக்குமம். ஹகார சகார ஓகார ஸகார ரகாரங்கள் விசர்க்கங்களாகிய ஆறெழுத்துக்கள் ஈருயிர் கொண்டும் மும்மெய்கொண்டும் உருயிர்

மெய்யுமாகாத ஓரயோகவாக வெழுத்துக்கொண்டும் முடிந்ததாத
லால் இதன் சந்தமங்கனம் குறிக்கப்பட்டதென்க. மும்மெய்கள்
தூலசூக்குமகாரண சரீரங்களைக் குறிக்கும். ஈருயிர்கள் ஜீவாத்தும
பரமாத்துமாக்களைக் குறிக்கும். அயோகவாஹ வெழுத்தானது ஜட
சேதனங்களுக்கு விலக்ஷணமாய் அனிர்வசனீய மாயுள்ள மாயா
சொரூபத்தைச் சொல்லும். ஆகையால் மாயையென்ற உபாதியா
ற்றான் ஜீவாத்தும பரமாத்தும பேதமும் முச்சரீரங்களும் ஆன்மா
வுக்கு என்பது புலப்படும். இரண்டு உயிரெழுத்துகளும் ஒன்றே
யாதலால் ஒருவனே ஆத்துமாவென்பது சித்திக்கின்றது. மற்ற
துமற்றோரிடம். பரமஹம்ஸன் = பரமேசுவரன், பரமாத்துமா; அ
தாவது அதைதன்னியமாத்திரமாய்க் கொள்ளவேண்டும். அதுதேவ
தை யென்றால் அஃது இம்மந்திரத்தின் பொருள் என்பது கருத்
து. அதுபிரத்தியக பின்னமாய் நிரூபிக்கப்படுவதாம். ஹம்என்பது
ஜீவசொரூபத்தையும் ஆகாசத்தையும் குறித்து, ஸ: என்பது ப
ரோக்ஷமாகத்தோன்றும் ஈச்சுரனையும் நாதத்தையும் குறித்தும்
நிற்குமாம்- பீஜம், சக்தி, கீலகம்என்பனமந்திரத்தினங்கங்களாம்-
மேலே மந்திரத்தின் சொரூபத்தையும் நிரூபித்து பிரணவத்தில்
மும்மாத்திரைகளமைந்தாற் போல இம்மந்திரத்தில் ஆறுமாத்தி
ரைகளமைந்தனவா மெனக்குறிக்கின்றார். அதனெண்ணிக்கை
ஆறென்றதால்- அம்மந்திரத்தின் மாத்திரைகளின் எண் ஆறு
என்பது கருத்து- முன் ஆறுமாத்திரைகளை யொருவாறு காட்டி
னோம். ஸோஹம் என்றவிடத்தும் ஸகார ஒகார ஸஃகார[3]
ர ஹகார அகார மகாரங்களாக ஆறுமாத்திரைகளுள்ளனவாம்-
ஸோஹம்என்றமந்திரத்தில்இடப்பட்டிருக்கும்இரண்டுமெய்களை
ழிந்தால் எஞ்சுவது பிரணவமேயாதலால், அதுவிசேஷமந்திரமா
ம்- அதில்ஸகாரம் சர்வபீஜமாதலாலும், ஓகாரம் நாதபீஜமாத
லாலும், எல்லாம் நாதமென்பது பூர்வப்பகுதியின் பொருள். ஹ
காரம் ஆத்துமபீஜமாதலாலும், மகாரம் பிந்துரூபமாதலாலும், ஆ
ன்மாவே அன்னதமய பிரபஞ்சோத்பத்திஸ்தானமாகிய பிந்துவா
மென்பது இதன்கருத்தாம். ஹம்பீஜம் பிராணன் முதலியவற்றை
க்குறிக்குமெனக்கொண்டு உபபிருங்கணங்களை யனுசரித்து வேறு
பலபொருள்களும் கொள்ளலாம். ஒருதினத்தில் இம்மந்திரம்

நித்தினேமுமிங்கு நிக்கப்படுகின்ற தென்பதை இருபத்தோராயிரத்து அறுநூறு என்பதாற்குறிக்கின்றார். இருபத்தோராயிரத்து அறுநூறு என்றதின்பொருள்யாதெனின், கூறுதும்.— அண்டமும் பிண்டமும் சமானமாயுள்ளதாதலால் பிண்டத்தில் சுவாசங்கள் அண்டத்தில் வைசுவானரவீதியெனப்படும் நட்சத்திரசக்கிரத்தின் அம்சங்களுக்கிணையாயுள்ளன. அச்சக்கிரத்திற் பனிரெண்டு ராசிகளும் பிண்டத்தில் மேலாதாரமாறும் கீழாதாரமாறுமெனப் பனிரெண்டாயமைந்தன— இவ்விலிங்கங்களில் மாறிமாறிச்சஞ்சரிக்கும் வாயுவுக்கு ஓர்வீற ஈராருக ஆரோகணாவரோகணங்களில் தோன்றும்— ஒவ்வொருராசியிலும் முப்பதுகலைகளுண்டு— இங்குமொவ்வோராதாரங்களிலும் முப்பதுபாகங்கள் பத்துவிநாடிகாலம் பிராணன் சஞ்சரிக்குமிடமாயுள்ளன— மூன்னூறு விநாடிகள் கொண்டஐந்துநாழிகைகள் ஒவ்வோராதாரத்தின் காலமாக்வேபனிரெண்டுக்கும், அறுபதுநாழிகைகளாயின அல்லது இரண்டுநாழிகைகள் கொண்டமுகூர்த்தம் முப்பதெனவும், கொள்ளலாம்— அதிலும் ஒவ்வொன்றிலும் அறுபதுபாகங்களுண்டு இங்குவிநாடிகளின் அம்சம் அறுபதில் பத்து அம்சங்களையுடைய வோர்காலம்— ஒன்றாகக் கொண்டு, அறுபதுபிரிவுகள் அதனுக்குண்டு— ஆகவே ஒருசுவாசத்தின் காலம் ஓர்விநாடியின் அறுபதிற்பத்துபாகங்களாக ஆதில் ஒன்றுபிறது— ஒருநாழிகைக்கு அறுபதுவிநாடிகளும் நாழிகைக்கு அறுபதுகொண்டது ஓர்தினமாதலால் $6 \times 60 \times 60 =$ தேறின்தொகை. 21600 இருபத்தோராயிரத்தறுநூறுஎன்பதாம். மேலே அங்கநியாச கரநியாசங்களுக்குரிய அறுவகை மந்திரங்களைக் குறிப்பாராய் அங்கஹம்ஸமந்திரார்த்தமே சர்வசொரூபமெனக்காட்டுகின்றார். சூரியனுக்கு என்பதாதியால்— சூரியன் = சூரியமண்டலாந்தர்யாமி ஸோமன் = உமாசகாயமூர்த்தி சந்திரனல்ல. மேல்அக்கினியுடன் அவன் சேர்ந்திடத்தோதப்படுதலால். நிரஞ்சனன் = உபாதியற்றவன் நிராபாசன் = விகாரமற்றவன் ஸ்தூலமும்சூக்ஷ்மமும் = வ்யவஹதம், = ஜடமும் ஜீவனும், அந்தர்யாமியும் அக்கினியும் சோமனும் = அக்கினிரூபனான சிவனும் சந்திரரூபனான சிவசக்தியும். இதனால் சர்வசொரூபனும் ஆத்துமாவேயென்றதாயிற்று. 'வௌஷட்' என்பதுஹோமக்குரியதாம். இதனால் சூரியசோமாக்கினிசொரூபமுள்ள ஆன்மாவிடத்தில்

இந்தப் பிரத்தியக் சைதன்யத்தைச் சேர்த்திடுவோமென்பது முடிந்தகருத்தாம். இப்பொருள்களையெல்லாம் சுருக்கியொருவாறு சூதசங்கிதை நிரூபித்தது. வருமாறு.— " [illegible]

காமினீ ! = சுருக்க விரிவின்றி ஆத்துமமந்திரத்தை நிரூபிப்பாம். இதற்கு பிரம்மாரிஷி, காயத்ரீசந்தம், ஆத்துமாவே தேவதை. ஸகாரம்சக்தி, ஹகாரம் பீஜம். பீஜமாயுள்ளவித்யாசக்தியானது சிவனேயன்றிவேறில்லை. ஆகையாலிந்த மந்திரம் சிவசக்திசொரூபமாம். இதையறிந்து பீஜசக்திசொரூபமான இம்மந்திரத்தை வித்துவான் ஜபிப்பானாக. சம்சாரமென்றதோர் பெரும்பிணிக்கு அருமருந்தாய அம்பிகை பாகன் மகாதேவனை தியானித்து எவன் இதனைப்பன்னீராயிரம் முறைஜபிப்பான் அவனுக்கெல்லாப்பாபங்களும் தொலையுமென்பதிற் சம்சயமில்லை. அல்லது பிராணபானங்களே ஸகார ஹகாரப் பொருளாமென, குருமுகமாய் எவனறிந்து கொள்ளுகிறான். அவன் ஹம்ஸமந்திரத்தை ஜபம் செய்யாதபோதிலும் செய்தவனே ஆவான். அதிற் சம்சயமில்லை ஆஸ்திக்யமென்ற சிரத்தையால் குருபக்திபூர்வமாய் எவன் இவ்வஜபாமந்திரத்தையறிவான் அவனுக்கு புத்திபூர்வமானப்பிரபலபாபங்களிருந்தாலும் அவைதொலையும். அல்லது இம்மந்திரம் ஜீவமந்திரமெனக் கொண்டு ஜீவனைக் குறிப்பதெனவும் பொருள் கொள்ளலாம். 'அஹம்' என்ற சொல்லுக்கு ஜீவனே பொருளென்பது உலகப்பிரசித்தமாதலாலும் சக்திமந்திரமென்ற ஸகாரம் பரமேச்சுரனைக் குறிப்பதாதலாலும் சர்வப்பிரசித்தனான பரமேச்சுரன்மஹத்துவம் முதல்அணுத்துவம்வரை சமஸ்தசராசரப்பிரபஞ்சமாய்த்தோன்றிஇருந்து லயஸ்தானமாயும் சேஷித்து ஸம்ஸாரியாகவும் தோன்றுபவன் அவனே ஸ்வானுபவப்பிரமாணத்தாலவனே நான் என்பதிற் சம்சயமில்லை. ஜீவாத்தும பரமாத்துமாக்களுக்கு பேதத்துடன் கூடிய சேர்க்கையை நினைக்காது சுத்த ஞானானந்த சொரூபமாய் பரிபூர்ணமாய் அத்துவைதமான யானேஎனப் பாவிக்கவேண்டும். பரமார்த்தத்தை வெளியிடும் வேதமும் இங்ஙனமேகுறித்தது'' என்பது. வேறு அனேகபுராணங்களிலும் இதன்விரிவுண்டு. அதனை விரிவஞ்சிவிடுத்தாம்.

அவதரணிகை

இவ்விதம் ஹம்ஸோபாஸ்திசெய்பவனுக்குண்டாம் பயனைக்குறிக்கின்றார்.

एवं कृत्वा हृदये हंसात्मानं ध्या-
येत् | अग्नीषोमौ पक्षावोंकारः शिर
उकारो बिन्दुः त्रिणेत्रं मुखं रुद्रो
रुद्रः | रुद्राणी चरणौ || द्विवि-
धं कण्ठतः कुर्यादुन्मनाः अजपो-
पसंहार इत्यभिधीयते ||

(இ—ள்·) இப்படிச்செய்து இதயத்தில் ஹம்சனாகிய ஆன்மாவை தியானம் செய்யவேண்டும். அக்னியும் சோமனும் பட்சங்கள். ஓங்காரம்தலை. உகாரம்பிந்து மூன்றுகண்ணுடையது முக்கியமுகம். முகம் உருத்திரன், ருத்திராணி இருகால்கள். கழுத்திலிருந்திரண்டாகச் செய்யவேண்டும். இதுவே மனதுக்கடங்காத அஜபையின் உபசங்காரமெனப்படும். என்பது.

(வி—ரை) இப்படிக்கு=முற்கூறியமுறைப்படி, செய்து= அங்கநியாசம் முதலியவற்றைச்செய்து; இதயத்தில்=முன்குறித்த இக்கணங்களுடன் கூடிய எட்டு இதள்களுள்ள மணிபூரக சக்கிரத்தில், ஹம்சனாகிய=பிராணத்துக்கதிட்டாதாவாகிய ஜீவசொரூபனாகிய; ஆத்மாவை=பிரம்மத்தை; தியானம்செய்யவேண்டும்=தனனைச் சிந்திக்கவேண்டும், அவ்வாத்துமாவை தியானித்தற்குரிய விசுவரூபத்தை நிரூபிக்கின்றார். அக்கினியும் என்பதாதியால். அக்னியும சோமனும் = புராணங்களில் சிவசக்தியாதாரமெனக் குறிக்கப்பட்ட இருதேவதைகள்.

“ அஹமக்நிஶ்ஶிரோ நிஷ்டஸ்ஸோமஶ்ஶிரஸி திஷ்டதா | அக்நீஷோமாத்மகம் விஶ்வாவாஹ்யாம் விப்ருதம்ப்ரியே = யான்அக்கினியின்தலையிலிருப்பேன், நீசந்திரமண்டலத்திலுள்ளாய்·ஆகவே அக்னியும் சோமனுமாய் பிரபஞ்சமெல்லாம் நம்மாலேயே அதிட்டிக்கப்பட்டதாம்” என்று புராணத்திலும் “ ருத்ரோ வா ஏஷ யதக்நி: = ருத்திரனன்றோ இவன்; எவனக்கினி யெனப்படுவான்” “ யா உமா ஸா ஸ்வயம் விஷ்ணு: யோ விஷ்ணு: ஸ ஹி சந்த்ர: = எவள் உமையோ அவள் மஹாவிஷ்ணுவாம். எவன்வி

ஷ்ணுவோ அவன் சந்திரனும்" என்றுவேதங்கள் கூறும் அக்கினியும் சோமனும் சிவசக்திசொரூபர்களென நிரூபிக்கப்படுதலாலென்க. இவர்களே அவ்வஜயாவிசுவரூபஹம்ஸனுக்கிருடக்கங்களாம். ஓங்காரம்=ஹரன் அல்லது சிவன். "[illegible], [illegible] = இவனே ஓங்காரமெனப்படுவான், அதனாலோங்காரமெனப்படுவான்" என்று அதர்வசிரசில் சிவனாமதேயங்களில் ஓங்காரமென்பதை நிரூபித்திருத்தலால். பிரமணமாகிய ஓங்காரமும் பிரமேயமாகிய சிவசொரூபமும் பரம முக்கியமாதலால் அது தலையென நிரூபிக்கப்பட்டதென்க. உகாரம்=உகாரத்துக்கு வாச்யனுள்ள உருத்திரன். பிந்து=வீரியம், சரீரத்துக்கதுவே பெலமாதலால். "[illegible] = பிராணன்களுக்கு இந்திரியாயுள்ளான் ருத்திரன்" என்று பிராணாகாரத்துக்கு வீரியசொரூபனும் ருத்திரன் குறிக்கப்படுதலால் மூன்றுகண்ணுடைய முக்கியமுகமென்றது. வேறுபல முகங்களிதற்கிருப்பினும். நடுவிலுள்ள பிரதானமுகமாகிய நடுமுகம் திருநேத்திரமுடைய சிவக்குறிபெற்றதாமெனக் குறித்தற்கே; முக்கியமென்பது மோக்ஷக்கெதி பரம் நிற்றலைக் குறிப்பது. முகம்=மற்றயமுகங்கள். ருத்திரன=ருத்திரசொரூபங்கள். ருத்திராணீ=மேற்கண்ட உருத்திரன் சக்தி; இருகால்கள்=கால்களென்றது ஆகுபெயராய் கைமுதலிய இருபாகுபாடுடைய உருவங்களையெல்லாம் குறிக்கும். அதனையே விரித்துக்காட்டுகின்றார் கழுத்திலிருந்து என்பதால். இங்கு இருகால்களென்றது கண்டம் முதல்பாதம்வரை இருபாகுபாடாக்கப்பட்ட சரீரம், அதாவது இருபக்கங்கள் எனக்குறிப்பதாம். அல்லது கழுத்தின்மேல்சிரம் ஒருபகுதியும் கீழொருபகுதியுமாய்க்கொண்டு மேல்பாகம் ருத்திரமயமாகவும், கீழ் பாகம் ருத்திரசக்திமயமாகவும் பாவிக்கவேண்டுமென்றும் பொருள் கொள்ளலாம். இங்கு நிரூபிக்கப்பட்ட இயானகுணவிதியெல்லாம் ஹம்ஸமென்பது சிவசக்திசொரூபமென்றும், பிந்துநாதசொரூபமென்றும், துணிந்தோதுவதற்கே யென்பதுண்மை. அதனையே மீண்டும் பிரசம்சிக்கின்றார். இது என்பதாதியால். ஞானத்துக்கடங்காத=எல்லாளவைக்கும் மேற்பட்ட தம்மான் அளவைக்கும் இலக்கப்படாதாயின்; அதன் பெருமை ...

பெரிதென்பது கருத்து. அஜபையின் = ஜபிக்கப்படாத அஜபை யாம் ஓரெழுத்தையுச்சரித்தற்குரிய இதழ்குவிவு, நாவசைவுமுத லிய எவ்வித துணைக்காரணங்களையுமவாவாது ஆமைமாவிடத்துள ம்முயற்சியுமின்றி உயிர்த்தலுடனமைந்ததாய், ஸ்வஸ்வரூபமாத் திரத்தில் அறிவுநிலைபெறவேண்டி அவாவப்படுவதாய்ச் சரீரத்தி லிருப்பது. முன்னோர் சேமித்துவைத்த நிதி அடிக்களையினடிப் புதைந்திருப்பினும், அஞ்சனசித்தியில்லாதார்க்கு அஃதகப்படுவது போல இவ்வான்மசொரூப அம்சாஜபாகாயத்திரியானது யோக சித்தியில்லாதார்க்குப் புலப்படாதென்றதாயிற்று, உடசகாரமெ ன்றதியல்பு; சொல்லப்படுமென்றவிடத்து யோகிகளாலெனவரு வித்துக்கூட்டுக.

அவதாரணிகை

இனியக்வனம் சொரூபஞானத்திறப்பினைக்கூறுகின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (என்று)

(இ—ள்) இப்படிக்கு ஹம்சவசமாய் நின்ற அவனிட த்து மனதை விசாரித்து அதனையே கோடி முறை ஜபித்தா ல் அதனால் நாதத்தையனுவிப்பான்- (எ—று)

(வி—ரை) இப்படிக்கு முற்கூறிய படிசர்வசொரூபத்துவ த்தை யனுசந்தானம் செய்து சிவசொரூபமான சர்வாங்கங்களுட ன் கூடியது அஜபை யென்றறிந்து, ஹம்ஸவசமாய் = அம்சனெ ன்ற பரமாத்துமாவின் வசப்பட்டு. அவனுடனைக்கியம் பெற்றமன தை விசாரித்து = மனமென்ற அந்தக்கரணத்தை விசாரித்து விலக்கி அதனையே = ஹம்சமென்ற அஜபாமந்திரத்தையே; கோடிமுறை = சர்லகணிதப்படிஸ்தூலத்தில் ஒருவருடம் மூன்று மாதம் எட் டுதினங்களுமாம். சூக்குமத்தில் சில நாழிகைகள் குறையும். அ திசூக்குமமாகப் பார்த்தால் 2—3 தினங்களும் குறையும். எப்ப

டியானாலும் நானூற்று அறுபத்து மூன்று தினங்களுக்கு இரண்டு நாழிகைகளும் பதிமூன்று வினாடிகளும், தற்பரைகளிருபதும் குறைந்தகாலமாம். இது இடையறாது ஏகநிட்டையிலுள்ள உத்தமனுக்கு. மற்றவர்க்கு இருபத்து நான்கு வருஷங்கள் வரையிலும் காலத்துக்கேற்றபடி சித்திகாலமும் அதிகமாம். இக்காலத்தை நாதோர்ப்பத்திகாலமென்று அறியவேண்டும். இதைப்பத்தாகப்பிரித்தால் ஒவ்வொருபத்து லட்சங்களுக்கும் மேல் குறிக்கப்படும் ஒவ்வொருநாதானுபவமுண்டாம். (எ—று)

அவதரணிகை

மேல் குறித்தபல்வகை நாதங்களின் வேற்றுமையைக் குறிக்கின்றார்.

ஸ ச தஶவித உபஜாயதே
சிணீதி ப்ரதம:
சிணிசிணீதி த்விதீய:
கண்டாநாதஸ்த்ருதீய:
ஶங்கநாதஶ்சதுர்த்த:
பஞ்சமஸ்தந்த்ரீநாத:
ஷஷ்டஸ்தாளநாத:
ஸப்தமோ வேணுநாத:
அஷ்டமோ பேரீநாத:
நவமோ ம்ருதங்கநாத:
தஶமோ மேகநாத: (என்று)

(இ—ள்) அது பத்து விதமாகவுண்டாகும்- 'சிணு' என்பது முதல்- 'சிணுசிணு' என்பது இரண்டு- மணியோசை மூன்று- சங்குநாதம் நான்கு. தந்தியின் நாதம் ஐந்து. தாளத்தின் நாதம் ஆறு. வேணுநாதம் ஏழு. பேரிகையின் நாதம் எட்டு, மிருதங்கநாதம்ஒன்பது, மேகநாதம் பத்து (எ—று)

(வி—ரை) சிணீ என்ற முதல் நாதத்திற்கு சிணீசிணீ என்ற இரண்டாவது நாதம் ஒருமாத்திரை அதிகமென்றதே விசேஷ ம். மற்றதுவெளி.

அவதாரணிகை

மேற்கண்டவழிபாட்டில் விசேஷங்களைக்குறிக்கின்றார்.

𑌨𑌵𑌮𑌂 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌦𑌶𑌮𑌮𑍇𑌵𑌾𑌭𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 (என்று)

(இ—ள்) ஒன்பதாவது நாதத்தையும் விட்டு பத்தா வதையே அப்பியசிக்கவேண்டும்.

(வி—ரை.) ஒன்பதாவதையும் விட்டு என்றதனால் ஒன்றன் மேலொன்றாக மேன்மேலும் நாதங்களைத்தொடர்ந்து வந்து இறுதியி லுள்ளமேகநாதத்தைஎன்றும்விடாதநுஷ்டிக்கவேண்டுமென்பதே

அவதாரணிகை

மேற்குறித்தபடி பத்துவகைநாதத்தினனுபவமுறையில் ப யனைக் குறிக்கின்றார்.

𑌪𑍍𑌰𑌥𑌮𑍇 𑌚𑌿𑌞𑍍𑌚𑌿𑌣𑍀𑌗𑌾𑌤𑍍𑌰𑌂
𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇 𑌗𑌾𑌤𑍍𑌰𑌭𑌞𑍍𑌜𑌨𑌮𑍍 |
𑌤𑍃𑌤𑍀𑌯𑍇 𑌭𑍇𑌦𑌨𑌂 𑌯𑌾𑌤𑌿
𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍇 𑌕𑌮𑍍𑌪𑌤𑍇 𑌶𑌿𑌰𑌃 |
𑌪𑌞𑍍𑌚𑌮𑍇 𑌸𑍍𑌰𑌵𑌤𑍇 𑌤𑌾𑌲𑍁
𑌷𑌷𑍍𑌠𑍇𑌮𑍃𑌤𑌨𑌿𑌷𑍇𑌵𑌣𑌮𑍍 |
𑌸𑌪𑍍𑌤𑌮𑍇 𑌗𑍂𑌢𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂
𑌪𑌰𑌾𑌵𑌾𑌚𑌾 𑌤𑌥𑌾𑌷𑍍𑌟𑌮𑍇 |
𑌅𑌦𑍃𑌶𑍍𑌯𑌂 𑌨𑌵𑌮𑍇 𑌦𑍇𑌹𑌂
𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌸𑍍𑌤𑌥𑌾𑌮𑌲𑌮𑍍 |
𑌦𑌶𑌮𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮
𑌭𑌵𑍇𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 || (என்று)

(இ—ள்.) முதலாகிய சிணிசிணி யென்றநாதத்தில் சரீரம் புருக்கும்; இரண்டாவதில் சரீரத்தின் சந்திகளில் நோவுதோன்றும். மூன்றாவதில் சரீரம் உடைவதுபோல் கடுந்துயரமுண்டாம். நாலாவதாகிய சங்குநாதத்தில் தலையாட்டமுண்டாம். ஐந்தாவதிலிருகன்னங்களும் பெருகும், ஆறாவதிலமிர்தத்தை யருந்துவான். ஏழில்ரகசியத்தை யறிவான் எட்டில் பரையைக்காண்பான். ஒன்பதில் தேகம் மறைவதுடன் திவ்யதரிசனமுண்டாகும். பத்தாவதில் பிரம்மமும் ஜீவனும் கலந்து பரப்பிரம்மமாகவேயாகும். (எ—று)

(வி—ரை.) முதல்நாதத்தை யனுபவிக்குங் காலத்தில் சரீரம் புருக்குமென்றால் அதனிடத்துள்ள ஒவ்வொரு நாடிகளிலும் ரசயுதிகொள்ளுமென்பது கருத்தாம். இரண்டாவதிலும் மூன்றாவதிலும், ஓர்வகைத்துயரமுண்டாமாயினும் அதனைவிடாதனுட்டிக்கவேண்டும். எவ்வளவாசனங்களைக்கொண்டு நிலைநிறுத்தினாலும் சங்கநாதத்தில் தலையாட்டமே யாடும். இந்தநான்காம் நாதம்முதல்எல்லாம் சுகமயமேயாம். கன்னங்கள் பெருகுமென்றது கன்னங்களினுட்புறத்தில் நீர்ப்பெருக்கமுண்டாகுமென்றகருத்தால் ஆறாவது நாதத்தில் உச்சியில் ஸஹஸ்ராரகமலத்திலுள்ள சந்திரமண்டலத்தினின்று பெருகுமமுதம் சேவிக்கப்படுமாம். ஏழாவது வேணுவாத்தியம் போன்றநாதமாதலின், அதனனுபவகாலத்தில் அத்தியந்த ரகசியமான மத்தியமையென்ற நாதாம்சமான சுத்தஸ்போட சொரூபத்தை யறிவானென்பது கருத்து. அல்லது, வைகரி, மத்தியமை, பச்யந்தீவரை அறிவுண்டாகுமென்பதும் கருத்தாகலாம். எட்டாவது நாதத்தில் அதிசூட்சுமமாகிய பரையென்ற வாக்குவெளிப்படுமாம். ஒன்பதாவது நாதத்தில் சரீரம் மற்றவர்க்குப் புலப்படாதவழிமறைந்தாலும் இருந்தவிடத்தே சமஸ்தலோகங்களிலுமுள்ள பதார்த்தங்களையறியக்கூடிய ஞானக்கண்ணுண்டாம். அன்றி சூரியன் முதலிய ஒளிகளைப் பார்த்தாலும் அஃதெவ்விதக்குறைவையும் பெறாதாம். பத்தாவதுநாதத்தில் ஜீவப்பிரம்மங்கள் உபாதிவிலகி ஒன்றுபட்டு ஏகரசமாய் சைதன்யமாத்திரமாய் எஞ்சிநிற்கும். ஆகையால் இந்தப்பத்தாவது நாதத்தையே பிராரப்தக்ஷயமுள்ளவரை விடாதப்பியசித்து வரவேண்டுமென்பது இம்மந்திரத்தின் பரமசித்தாந்தம்.

அவதாரணிகை

இந்த நாதோபாசனத்திற்கு முக்கியமான பிரயோஜனம் மோட்சமேயெனக் காட்டுகின்றார்.

தஸ்மிந் மநோ விலீயதே
மநஸி விலீநே
ஸங்கல்ப விகல்பே தக்தே
புண்யபாபே
ஸதாஶிவஶ்ஶக்த்யாத்மா
ஸர்வத்ராவஸ்தித: ஸ்வயஞ்ஜ்யோதி:
ஶுத்தோ நிரஞ்ஜநஶ்ஶாந்த: ப்ரகாஶத இதி ||

(இ—ள்) அதனான் மனோவிலய மென்ற மனநாசம் வந்த பொழுது சங்கற்ப விகற்பங்க ளொழிந்து புண்யபாபந்துலைய சதாசிவ சொரூபனாய்ப் பிரணவ சக்திரூபனாய் எங்கும் நிறைந்து சுவயம் சோதியாய் சுத்தனாய் பற்றில்லாதவனாய் சாந்தனாய்ப்பிரகாசிப்பான் என்பது.

(வி—ரை) மேற்கண்ட பத்தாவது நாதத்தை யிடையறாதனுபவிப்பவற்கு மனமொழிய அதன் சொரூபமாகிய சங்கற்பவிகற்பங்களும் அவற்றின் காரியமான புண்ணியபாபங்களும், எல்லாமொழிந்திடுமாம். பிரணவமென்றசிவனும் சக்தியுமாகத்தோற்றும் பரமேசுவரனது சுத்தசைதன்யத்தில் கலந்து ஸ்வப்பிரகாசனாய் உபாதிகள் நீங்கி எல்லாமாய் நின்று கேவல சைதன்னியமாத்திரமாய்ப் பிரகாசிப்பானென்பது. இவ்வளவு விரிவாய் நிரூபித்த ஹம்சவித்தையின் பிரயோஜனம்யாதெனின் மனதுலயித்துசங்கற்பவிகற்பங்களொழிந்து கன்மந்துலைந்தழி பிரத்தியகபின்ன சொரூபமான பிரம்மம் தானே சொரூபமாய் விளங்குமாதலின், இஃது அறியதோர் பிரம்மவித்தியா மார்க்கமாய் மோட்ச வித்தையாம் என்றது.

உபநிஷத்வித்தியா

அவதரணிகை

இனியுபசங்கரிக்கின்றார்.


ஓம் வேதாநுவசநம் பவதி

ஓம் இத்யுபநிஷத் |

(இ—ள்.) இப்படிக்கு வேதானுவசனம் ஆகின்ற தென்பது, ஓம் என்பது உபநிஷத்து.

(வி—ரை.) இவ்வித்தை சுத்தவைதிகர்க்குபயோகமானவேதாந்த வித்தையாமென்பதை இவ்விறுதிமந்திரங்குறித்துக்காட்டுகின்றது, தொடர்ந்துவந்த பிரம்மவித்தையின் இறுதியில் மங்களார்த்தமாய், ஓங்காரத்தையுபயோகிக்கின்றாரென்றது இவ்வுபநிடதத்திற்கோர் சிற்றுரை சிவன் திருவடிகளுக்கோர் வில்வத்தளிராகுக. சிவம். சிவம். இங்ஙனம்.

பரசமய பஞ்சானன பண்டித பாஞ்சஜன்ய
பிரம்மவித்தியாபத்திராதிபர்
கு- ஸ்ரீநிவாசதீட்சிதர்வர்களால்
இயற்றப்பட்ட
சதோபநிடதவியாக்யானங்களில்
ஹம்சோபநிடதவுரை முற்றிற்று.



ஹம்ஸோபநிடதத்தின்

தாத்பரியசங்கிரகம்.

இவ்வுபநிடதம் சுத்தசிவாத்வைத வித்தையாமென்பதற்கு இவ்வுரையே போதுமானது; ஆயினும் உபக்கிரமம் முதலிய அறுவகைக்குறியீடுகளைக்கொண்டு ஒவ்வொரு உபநிடதங்களையும் அத்துவிதவித்தைகளாகநிரூபிக்கும் முறையில் இதனையும்நிரூபிப்பாம்.

(1) உபக்கிரமும் உபசங்காரமும் "[illegible]" இத்யாதி அவனே பிரம்மமும் பரமாத்துமாவுமெனப்படுவான்- அவனே சதாசிவனும் சக்திசிவசொரூபனுமாவான் என்பன.

(2) அப்பியாசம், "[illegible]" முதலியன.

(3) இவ்விதம் விரிவாய் அஜபாகாயத்ரியின் சாங்கோபாங்கஸ்திதியானது எங்குமெடுத்தோதப்படாமையின், அதற்கு அபூர்வதையுமுண்டு.

(4) இறுதியில் பரப்பிரம்மசொரூபமே பலமெனக் குறித்தலால் மோட்சமே இதன்பயனும்.

(5) இதற்குசனத்குமாரகௌதமஸம்வாதம் முதலியனவும், சிவஸம்மதம் முதலியனவும் சிவமதமாம் என்பதாதியும் அர்த்தவாதமாம்.

(6) தியானக்கிரமநிரூபணாதிகள் உபபத்தியாம்.

ஆகவே அறுவகைக் குறியீடுகளால் அத்வைதசாஸ்திரமேஇஃதாயிற்று இதனைபட்டநாராயணர், ஸ்ரீசங்கரானந்த குருமூர்த்திகள் முதலியவான்றோரும் வியாக்கியானித்துளார். ஆகவே இவ்வுபநிடதம் சுத்தவேதாந்தவித்தையென்பதற்கு ஏதும் தடையில்லை- பட்டநாராயணர்முதலியோர் எழுதினஉரையில் சிலபாடபேதங்களிருப்பினும் அவையெல்லாம் யாமெடுத்துக் கொண்டபாடத்துக்கு முற்றும் விரோதமின்மையால் யாம் இத்தென்னாட்டுப்பாடத்தைக் கொண்டே வியாக்கியானம் செய்தோம். இச்சிற்றுரையைதிகர்க்கென நிரூபிக்கப்பட்டதாயின் சூதசங்கிதை முதலிய பல புராணங்களில் இவ்வுபநிடதப்பொருளையனுசரித்து அஜபாவைபவம் நிரூபிக்கப்பட்டமையின். இவ்வுபநிடதம் சுத்தாத்வைதவேதாந்தமாம் என்பதற்கு சிறிதும் தடையில்லையென்பதோர் திறிதாம். சுபம்.

முற்றிற்று.

ஹம்ஸோபநிடதத்தின்

அரும்பதவுரை

அநாகார: = உருவமற்றவன்

அவ்யக்த காயத்ரீ = சூக்குமமான ஆறெழுத்துடைய யாப்பு

ஆக்ருதி: = சொரூபம்

ஆதார: = மூலாதாரம்

ஓங்கார: = பிரணவம், சிவன்

ஓம்ஹக்த்ராத்ரா = சிவசக்திரூபன்

கோஶ: = பொக்கிஷம்

சிணீதி = சிணுஎன்று

சிணிசிணீதி = சிணுசிணுவென்று

சிம்சிணீ = சிண்சிண் என்றநாதத்தில்

த்ரிமாத்ர: = பிரணவம்

நாடீ: = அஜை

பரமஹம்ஸ: = ஓர்வகை சன்னியாசி, பரமாத்துமா

பரா = பரையென்ற சூக்குமவாக்கு

பிந்து: = வீரியம்

வாசா = வாக்கு

விஸ்தார: = இலக்கணம், விரிவு

வௌஷட் = ஓர்வியாஹ்ருதி

ஶாந்ததமா: = இருளொழித்தவன்

ஷட்ஸ்வரா = ஆறென்ற எண்

ஹம்ஸ: = பிராணன், ஆத்துமா, பிரம்மம்

ஹம்ஸவஶ: = ஹம்சத்துக்கு வசப்பட்டவன்

ஜாம்வோபநிடத்தின்

இலக்கணக் கொத்து.

[illegible]

ஶார்ங்கம் = ஶார்ங்கஸம்ஜ்ஞாயுக்தம் தனு: - உபயோஜிதஸார
வஜ்ரஸாரம்

ஶிஷ்டா = [illegible] - இதி நாமவான்.

ஸங்கல்பவிகல்பரூப = ஸங்கல்பவிகல்பரூப [illegible].

வேதஶிரோவதம்ஸகாந்தா = [illegible]

வேதஶிரஸ்ஸு [illegible]

ஶ்ரீ [illegible] = [illegible] நாமாவலியாகும்.

ஸம்வத்ஸர = ஸம்வத்ஸர [illegible].

முற்றிற்று.